1974 மார்ச் 23]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்கொலை என்றுதான் இருக்கிறது.

சென்னை மாநகர குடியிருப்பவர்கள் பாதுகாப்பு சட்டம்

* 582 வினு—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர குடியிருப்பவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (Madras City Tenants Protection Act) விதிகளைக் கிராமங்களுக்கும் விஸ்தரிக்கும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

Sivakasi Panchayat Union Council

* 583 *Q.*—THIRU N. DENNIS: THIRU K. SUPPU: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Sivakasi Panchayat Union Council has been dissolved by the Government in March 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்ட முட்டுக்கட்டையின் காரணமாகவும், ஒன்றியக்குழு அதன்மேல் சட்டப் பூர்வமாக அளிக்கப்பட்ட கடமைகளைத் தொடர்ந்து செய்யத் தவறியதன் காரணத்திற்காகவும் அரசு இராமனுதபுரம் மாவட்டத்தில் உள்ள சிவகாசி ஊராட்சி ஒன்றியக் குழுவை 17—3—1973-ல் இருந்து மூன்று மாதத்திற்கு கலைக்க உத்திரவிட்டது. மேலே குறிப்பிட்டுள்ள அரசின் உத்திரவினை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்துள்ளது. ஊராட்சி ஒன்றியக் குழு மூன்று மாதங்கள் மேற்கொண்டு செயல்பட அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், அதன்பின்னர் அரசு இதுபற்றி மீண்டும் பரிசீலிக்கலாம் என்ற கருத்தினையும் சுப்ரீம் கோர்ட் வெளியிட்டிருக்கிறது. கோர்ட்டாரின் உத்திரவுக்கிணங்க ஒன்றியக் குழுவை செயல்பட அனுமதிக்கும்படி கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்.